Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 356/2023**

**Deposition of PW. 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | ஜாதி | : | |
| த/பெ | | ஆண்டிச்சாமி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | பாளையங்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 47 /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2024.

(Accused present )

**முதல் விசாரணை**

**நான்** பாளையங்கோட்டையில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா 1 ஜெயக்குமார் என்வரை தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை. காலை 07.45 மணியளவில் பாளையங்கோட்டை பிரிவில் நானும் ரமேஷ் என்வரும் நின்றுகொண்டிருந்தபோது ராணி என்பவர் பூ பறித்துவிட்டு பூவோடு வந்து பூவை பேருந்தில் கொடுத்து அனுப்பிவிட்டு வத்தலகுண்டு - செம்பட்டி ரோட்டை கடந்து பாளையங்கோட்டை பிரிவில் உள்ள தனது வீட்டிற்கு செல்லும்போது அதிவேகமாக வத்தலகுண்டு பக்கமாக வந்த பைக் ராணியின் மீது மோதி அவரை கீழே உருட்டிவிட்டது. அதில் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுவிட்டது. பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுககல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின் அவரது மகன் ஜெயக்குமாருக்கு தகவல் கொடுத்தேன். ராணி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள். பைக்கை ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. அவர் இங்கு இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ராணி என்பவர் திண்டுக்கல் பஸ்சில் பூவை கொடுத்துவிட்டார். அவர் திண்டுக்கலுக்கு பூ கொடுக்க வேண்டும் என்றால் ரோட்டை கிராஸ் செய்து வந்துதான் பூ கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தை நான் பார்த்தபோது சுமார் 10 பேர் அங்கு இருநதார்கள். திண்டுக்கல் - செம்பட்டி ரோட்டில் நான் வடக்கு பக்கமாக நின்று இருந்தேன். வடக்கு பக்கம் நின்று இருந்தபோது வடக்கு பக்கமாக நின்று கொண்டிருந்தேன். நான் செம்பட்டி போவதற்காக நின்றுகொண்டிருந்தேன்.நான் செம்பட்டி போகவேண்டும் என்றால் சாலையை கிராஸ் செய்து வடக்கு பக்கமாக போகவேண்டும் என்றால் சரிதான். நான் விபத்து நடந்த பின்புதான் திருப்பி பார்த்தேன். நடந்தபோது பார்க்கவில்லை. ஜெயக்குமார் என்வருக்கு

ரமேஷ் என்பவர் தகவல் சொன்னார். விபத்து ஏற்படுத்திய பைக்கிற்கு சேதாரம் ஏற்பட்டுள்ளது. செம்பட்டி - வத்தலகுண்டு ரோட்டின் சென்டர் பகுதியில் தடுப்பு சுவர் உள்ளதா என்றால் இல்லை. அந்த நால் ரோட்டில் சிகப்பு மஞ்சள் கலரில் லைட் எரிவது போல் இருந்ததா என்றால் சரிதான். அது நால் ரோடு என்பதால் பொதுவாக வண்டியில் வருபவர்கள் மெதுவாக வருவார்கள் என்றால் சரியல்ல. வண்டி வத்தலகுண்டில் இருந்து செம்பட்டி வந்தது. ராணி என்வரின் வீடு தெற்கே உள்ளது, தோட்டம் வடக்கே உள்ளது. 108 ஆம்புலன்ஸ்க்கு நான் போன் பன்னவில்லை வேறு யாரோ பன்னினார்கள். போலிசார் என்னை போலிஸ் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இறந்த போன ராணி எனது சின்னம்மா என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.